**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 83/2025

CNR NO.TNTU09-001325-2025

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>காவலூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 4/2023 |
| 2. | எதிரி | சலாவுதீன் த/பெ. முகமது காசீம் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 294(b), 324. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 19.02.2023 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 21.02.2023 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | Station bail<br>23.02.2023-23.02.2023 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 09.04.2025 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 13.06.2025 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.01.08.2025 குவிமுச.பிரிவு 320(2)-ன் கீழ் 2783/2025. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1-அ.சா.3-01.08.2025<br>அ.சா.4-26.03.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)-ன் கீழ் வினவிய நாள் | 27.03.2026 |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை | - |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 30.03.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை. |

**நீதித்துறை படிவம் எண்: 61**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், காவலூர் காவல் நிலையம்.

எதிரி : சலாவுதீன் த/பெ. முகமது காசீம்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 294(b), 324.

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 294(b), 324 குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரியை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரி பெயர் | தந்தை/ கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | சலாவுதீன் | முகமது காசீம் | முஸ்லீம் | கூலி | சதிராம், வாணியம்பாடி | 26 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணை யின் தொடக்கம் | விசாரணை யின் முடிவு | உத்தரவு | |
| 19.02.23 | 21.02.23 | Station bail 23.02.2023 | Station bail 23.02.2023 | 13.06.25 | 27.03.26 | 30.03.26 | – |

இவ்வழக்கானது 07.04.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 27.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி

அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.திருப்பதி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## தீர்ப்புரை

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கில் காவலூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கடந்த 19.02.2023ம் தேதி மாலை 15.15 மணிக்கு நாய்க்கனூர் கிராமம் கிரிக்கெட் மைதானத்திடம் விளையாட சென்றிருந்த வாதியான சாட்சி 1 பிரசாந்த் மற்றும் சாட்சி 2 வெங்கடேசனும் அங்கு இருந்த ஒரு பாழடைந்த பங்களா உள்ளே சென்று விட்டு வெளியே வந்த போது எதிரி சலாவுதீன் சாட்சி 1 மற்றும் 2ஐ உரசி விட்டு, கோத்தா தேவிடியா பசங்கலே என்று அசிங்கமாக திட்டியதாகவும், சாட்சி 1ஐ கீழே கிடந்த உடைந்த பாட்டில் ஒன்றை எடுத்து வந்து தலையின் பின்பக்கம் அடித்து இதில் காயம்பட்டு கீழே விழுந்ததும் அவரது வலது காலில் மேல் ஒரு சிறிய கல்லை எடுத்து போட்டுவிட்டு சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக காவலூர் காவல் உதவி ஆய்வாளர் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரியின் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 294(b), 324–ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324–ன் கீழ்

குற்றச்சாட்டுகளை வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேலும், இவ்வழக்கின் திரு.நாகராஜன், உதவி ஆய்வாளருக்கு பதிலாக காவலூர் காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் திரு.நாசி, ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிரிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5(i) அ.சா.1 பிரசாந்த் இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்ற மற்றும் புகார்தாரர் ஆவார். அ.சா.1 பிரசாந்த் கடந்த 2023ம் வருடத்தில் ஊரில் கிரிக்கெட் விளையாடும்போது வாய்ப்பேச்சில் சண்டை வந்து, பிறகு தள்ளுமுள்ளில் கீழே விழுந்ததால் பின்னந்தலையில் அடிபட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திரு.நாகராஜன், உதவி ஆய்வாளர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 பிரசாந்த் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(ii) திரு.நாகராஜன், உதவி ஆய்வாளர் புகார் வாக்குமூலத்திற்கு ஏற்ப நிலைய குற்ற எண் 4/2023 இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1)-ன் கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு, 21.02.2023ம் தேதி 14.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சிலம்பரசன், சரத்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5(iii) பின்பு, அதே நாள் சாட்சிகள் சிலம்பரசன், சரத்குமார் முன்னிலையில் சம்பவயிடத்தில் கைப்பற்றிய சா.பொ.1 கருங்கல் ஒன்று, சா.பொ.2 உடைந்த பீர் பாட்டில் ஒன்றை அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். கைப்பற்றிய சா.பொ.1 கருங்கல் ஒன்று, சா.பொ.2 உடைந்த பீர் பாட்டில் ஒன்றை அ.சா.ஆ.8 படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

பின்பு, சாட்சிகள் அ.சா.1 பிரசாந்த், அ.சா.2 வெங்கடேசன், அ.சா.3 புருசோத்தமன் மகசர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியை 23.02.2023ம் தேதி காலை 11.00 மணிக்கு ஆலமரம் பஸ் ஸ்டாப்பிடம் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சிந்து என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.9 காயச்சான்றிதழை பெற்றுள்ளார். பின்னர், வழக்கின் இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1)–லிருந்து இ.த.ச பிரிவுகள் 294(b), 324–ன் கீழ் அ.சா.ஆ.10 பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து பின்னர், புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என கூறினார். மேலும். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்</u>

7. இவ்வழக்கில் அ.சா.1 பிரசாந்த் மற்றும் அ.சா.2 வெங்கடேசனும் அங்கு இருந்த ஒரு பாழடைந்த பங்களா உள்ளே சென்று விட்டு வெளியே வந்த போது எதிரி சலாவுதீன் அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ உரசி விட்டு, கோத்தா தேவிடியா பசங்கலே என்று அசிங்கமாக திட்டியும், அ.சா.1 ஐ கீழே கிடந்த உடைந்த பாட்டில் ஒன்றை எடுத்து வந்து தலையின் பின்பக்கம் அடித்து இதில் காயம்பட்டு கீழே விழுந்ததும் அவரது வலது காலில் மேல் ஒரு சிறிய கல்லை எடுத்து போட்டுவிட்டு சொற்பகாயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் எதிரியின் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கில் முக்கிய சாட்சியான புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான பிரசாந்த் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 பிரசாந்த் அவரது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 2023ம் வருடத்தில் ஒரு நாள் ஊரில் கிரிக்கெட் விளையாடும்போது வாய்ப்பேச்சில் சண்டை வந்தது. ஊரில் பேசி சமாதானம் செய்து வைத்தார்கள். பிறகு தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்ததால் பின்னந்தலையில் எனக்கு அடிப்பட்டது. அதனால் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். சிகிச்சையிலிருந்தபோது போலிசார் அங்கு வந்து என்னிடம் எழுதப்படாத வெள்ளை தாளில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

9. வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 வெங்கடேசன் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " சுமார் 2 வருடத்திற்கு முன் நாயக்கனூர் மைதானத்தில் கிரிக்கெட் விளையாடும்போது அ.சா.1க்கும், ஆஜர் எதிரிக்கும் வாய்ப்பேச்சில் சண்டை வந்தது. பிறகு தள்ளுமுள்ளில் அ.சா.1 கீழே விழுந்ததால் பின்னந்தலையில் அ.சா.1க்கு அடிப்பட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

10. வழக்கின் கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 புருசோத்தமன் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1, அ.சா.2ஐ தெரியும். சம்பவத்தின்போது நான் ஊரில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை." என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

11. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 4, 5, 6, 7 ஆகியோர்கள் விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வழக்கின் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 பிரசாந்த், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 வெங்கடேசன், கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 புருசோத்தமன் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை.ஆகையால், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. அ.சா.4 நாசி, உதவி ஆய்வாளர், அவரது சாட்சியத்தில் உதவி ஆய்வாளர் திரு.நாகராஜன், வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் அ.சா.1 பிரசாந்த் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.3 புகார்வாக்குமூலத்தைப் பெற்று, அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னர், அவரே வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், அதே சாட்சிகள் முன்னிலையில் கருங்கல் ஒன்று, உடைந்த பீர் பாட்டில் ஒன்றை அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதை குறித்தும், அனைத்து சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து, எதிரியை கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.9 காயச்சான்றிதழை பெற்று, அ.சா.ஆ.10 பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து, புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததைக் குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

13. அ.சா.1 பிரசாந்த் புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையின்போதும், எதிரி சலாவுதீன் அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ உரசி விட்டு, கோத்தா தேவிடியா பசங்கலே என்று அசிங்கமாக திட்டியும், அ.சா.1 ஐ கீழே கிடந்த உடைந்த பாட்டில் ஒன்றை எடுத்து வந்து தலையின் பின்பக்கம் அடித்து இதில் காயம்பட்டு கீழே விழுந்ததும் அவரது வலது காலில் மேல் ஒரு சிறிய கல்லை எடுத்து போட்டுவிட்டு சொற்பகாயம் ஏற்படுத்தியதாக கூறிவிட்டு, அதற்கு முற்றிலும் மாறாக, தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக கிரிக்கெட் விளையாடும்போது வாய்ப்பேச்சில் சண்டை வந்து பிறகு தள்ளுமுள்ளில் கீழே விழுந்ததால் பின்னந்தலையில் அடிப்பட்டது என்றும் போலிசார்எழுதப்படாத வெள்ளை தாளில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றார்போல், வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிரியும், அ.சா.1ம் சமாதானம் ஆகிவிட்டதாக கொடுத்த 01.08.2025ம் தேதி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் குற்ற பல்வகை மனு எண் 2783/2025ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி, மனுவானது இவ்வழக்கின் சில குற்றங்கள் சட்டப்படியாக சமரசம் தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

14. இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 பிரசாந்த் அவரது சாட்சியத்தில் கிரிக்கெட் விளையாடும்போது வாய்ப்பேச்சில் சண்டை வந்து பிறகு ஏற்பட்ட தள்ளுமுள்ளில் கீழே விழுந்ததால் பின்னந்தலையில் அடிபட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்குச் சென்றதாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 வெங்கடேசன் கிரிக்கெட் விளையாடும்போது வாய்ப்பேச்சில் சண்டை வந்து பிறகு ஏற்பட்ட தள்ளுமுள்ளில் கீழே விழுந்ததால் பின்னந்தலையில் அடிபட்டது என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 புருசோத்தமன் சம்பவத்தின்போது ஊரில் இல்லை என்றும், போலிசார் விசாரிக்கவில்லை என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரி குற்றம்

புரிந்தார் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 294(b), 324–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சணைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

15. **முடிவாக,** இவ்வழக்கில் எதிரி மீது இ.த.ச பிரிவு 294(b), 324–ன் கீழ் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யாததால் எதிரி குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. .

16. இவ்வழக்கில் சி.பி.114/2025ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான சா.பொ.1 கருங்கல் ஒன்று, சா.பொ.2 உடைந்த பீர் பாட்டில் ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணை பத்திரத்தை மேல்முறையீடு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிபடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு.பிரசாந்த் |
| 2 | அ.சா.2 | திரு.வெங்கடேசன் |
| 3 | அ.சா.3 | திரு.புருசோத்தமன் |
| 4 | அ.சா.4 | திரு.நாசி, உதவி ஆய்வாளர். |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 21.02.2023ஆம் தேதியிட்ட புகார்வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம். |
| 2. | அ.சா.ஆ.2 | 01.08.2025ஆம் தேதியிட்ட சமாதான மனு. |
| 3. | அ.சா.ஆ.3 | 21.02.2023ஆம் தேதியிட்ட புகார்வாக்குமூலம். |
| 4. | அ.சா.ஆ.4 | 21.02.2023ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |
| 5. | அ.சா.ஆ.5 | 21.02.2023ஆம் தேதியிட்ட பார்வை மகசர். |
| 6. | அ.சா.ஆ.6 | 21.02.2023ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம். |
| 7. | அ.சா.ஆ.7 | 21.02.2023ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசர். |
| 8. | அ.சா.ஆ.8 | 21.03.2025ஆம் தேதியிட்ட படிவம் 91. |
| 9. | அ.சா.ஆ.9 | 20.02.2023ஆம் தேதியிட்ட பிரசாந்த் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |
| 10. | அ.சா.ஆ.10 | 09.04.2025ஆம் தேதியிட்ட பிரிவு மாறுதல் அறிக்கை. |

**அரசு தரப்பு சான்று பொருள்**

| | | |
|---|---|---|
| 1. | சா.பொ.1 | கருங்கல் ஒன்று. |
| 2. | சா.பொ.2 | உடைந்த பீர் பாட்டில் ஒன்று. |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.